சென்னைமாவட்டமுதன்மைக் கல்விஅலுவலரின் செயல்முறைகள், சென்னை –08.

ந.க.எண்.5636/ஆ2/2021, நாள். .11.2022

பொருள் கல்வி – இடைநிலைக் கல்வி–தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையம், சென்னை–25– புத்தாக்க அறிவியியல் ஆய்வு மானக் விருது 2021–22 ஆம் ஆண்டிற்கான மாவட்ட அறிவியல் கண்காட்சி தொடர்பாக.

பார்வை 1 சென்னை–25, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மைய செயல் இயக்குநரின் கடிதம் எண்.3335/P1/2022 நாள் 23.11.2022 மற்றும் 28.11.2022 .

**********

பார்வையில் காணும் கடிதத்தின்படி, சென்னை– 25, தமிழ்நாடுஅறிவியல்மற்றும் தொழில்நுட்பமையம் சார்பாக புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதிற்காக ( INSPIRE MANAK AWARD) 2021–22 ஆம் ஆண்டுக்கு மாவட்ட அளவிலான கண்காட்சிகள் (District Level Exibition and Project Competition – DLEPC)இணையவழியில் நடத்தநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும். 2021–22 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள மாணவர்களுக்கு, அம்மாணவர்களுக்குரிய தொகை ரூ.10000/– அவரவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான கண்காட்சிகளை இணையவழியில் நடத்த மத்திய அரசின் அறிவியல்தொழில்நுட்பத் துறைமற்றும் தேசியபுத்தாக்கநிறுவனம் ஆகியன இணைந்து புதிய வழிமுறைகளை அறிவித்துள்ளன. தனிப்பட்ட கணினி அல்லது கைபேசி மென்பொருள் இப்பயன்பாட்டிற்கான உருவாக்கப்பட்டுள்ளது. MANAK Competition APP என்ற இதனை Google Play Store – ல் பதிவிறக்கிக் கொள்ளலாம் எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

2021–22ஆம் ஆண்டில் புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுக்கு சென்னை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 49 மாணவர்கள் மட்டுமே தங்களது அறிவியல் காட்சிப் பொருள் குறித்த விவரங்களைஅனுப்பவேண்டும். அவர்களது விருதுக்கான குறியீட்டு எண். (Award Code Number – எ.டு:21TN176143) ஒவ்வொரு மாணவருக்குமான User ID ஆகும்.இந்த எண்ணைப் பதிவிட்டு (Get Password) என்பதை அழுத்தினால் அவர்கள் முன்னரே பதிவு செய்துள்ள செல்பேசி எண்ணுக்கு OTP வாயிலாகக் கடவுச் சொல் (Password) அனுப்பப்படும்.

இதற்கான வழி முறைகள் (www.youtube.com/watch?v=IleWTYBe8o) என்ற காணொளி இணைப்பில் வழங்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிட்டுள்ளபடி மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் தங்களுடைய அறிவியல் செயல்முறைகளை ஒளி,ஒலிகாட்சிகள் மூலம் தயாரித்து செல்பேசிஅல்லது இணையதளம் மூலமாக அனுப்பவேண்டும். சுருக்கமாக ,ஆயிரம் வார்த்தைகளுக்கு மிகாத சுருக்கக் குறிப்பையும் இணைக்க வேண்டும். இம்முறையில் தமிழகத்திற்கான பதிவேற்றம் செய்யும் வாய்ப்பு 2022, டிசம்பர் 4 வரை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதன்பின் இணையம் பதிவுகளை ஏற்காது எனஅறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, இணைப்பில் காணும் பட்டியலில் உள்ள சார்ந்தப் பள்ளித் தலைமை ஆசிரியர் / பள்ளி முதல்வர்கள் தங்கள் பள்ளியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்களை மேற்காண் விவரப்படி உடனடியாக இணையத்தில் பதிவேற்றம் செய்ய துரிதநடடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு :

1. மாணவர்கள்பெயர் பட்டியல்.

ஆர்.சி.ப்ரியமா 30/11/22

முதன்மைக் கல்விஅலுவலருக்காக

சென்னை – 08

பெறுநர்

1. கல்விஅலுவலர் அவர்கள், சென்னைபள்ளிகள்( பெருநகராட்சி), சென்னை– 03.
2. அனைத்துமாவட்டக் கல்விஅலுவலர்கள், சென்னைமாவட்டம்,
3. சார்ந்த அரசு/உதவிபெறும்/சென்னை/தனியார் ( மெட்ரிக் / CBSE)பள்ளித் தலைமைஆசிரியர்கள்/ முதல்வர்கள், சென்னைமாவட்டம்.
4. அனைத்துவட்டாரக் கல்விஅலுவலர்கள், சென்னைமாவட்டம்.

நகல்

1. சென்னை– 06, பள்ளிக் கல்விஇயக்குநர் அவர்களுக்குதகவலுக்காகபணிந்தனுப்பப்படுகிறது.
2. சென்னை– 25, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்பமைய செயல் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner